**OS.49/2023**

**DW.1** சரஸ்வதி

08-04-2025 ஆம் தேதி அன்று சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது மனுவில் எனக்கும், தனபாலுக்கும் எப்பொழுது, எங்கு வைத்து திருமணம் நடந்தது என்று நான் குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால், சரிதான். ருக்மணி விவாகரத்துக்குப் பின்னர் வாதி தனபாலுடன் சுமூகமான உறவில்தான் இருந்தார் என்று சொன்னால் சரிதான். அவர்தான் வாதியின் கல்விக் கட்டணங்களைச் செலுத்தி வந்தார். வாதியை தனபால் ஹோட்டல் மற்றும் வெளியிடங்களுக்கு பொதுவாக அழைத்துச் செல்வது வழக்கம் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. வாதியின் பிறந்தநாள் மற்றும் விஷேசங்களுக்கு தனபால் வாழ்த்துக்களைக் கூறி பரிசுப் பொருட்கள் மற்றும் துணிமணிகளை வாங்கிக் கொடுப்பது மற்றும் பள்ளி மற்றும் கல்லூரி விழாக்களுக்கு செல்வது வழக்கம் என்று சொன்னால், துணிமணிகள், பரிசுகள் வாங்கிக் கொடுத்து வாழ்த்துக்கள் தெரிவிப்பது வழக்கம். ஆனால் பள்ளி, கல்லூரி விழாக்களுக்கு அவர் சென்றதில்லை. கோயமுத்தூர் வட்டமலைப்பாளையத்தில் உள்ள ராமகிருஷ்ணா இன்ஜினியரிங் கல்லூரியில் வாதி டிப்ளமோ & இன்ஜினியரிங் படித்தார் என்று சொன்னால் அது பற்றி எனக்குத் தெரியாது. மேற்படி கல்லூரியில் 2005 முதல் 2009 ஆம் ஆண்டு வரை அவர் படித்தார் என்று சொன்னால் எனக்கு அதைப் பற்றித் தெரியாது. தீபாவளி, பிறந்தநாள் மற்றும் பண்டிகைகளுக்கு சேரன் டவரில் உள்ள காலேஜ் கலெக்ஷன் என்ற கடையிலிருந்து துணிமணிகளை வாங்கிக் கொடுப்பது வழக்கம் என்று

சொன்னால், துணிமணிகளை வாங்கிக் கொடுப்பார் ஆனால் எனக்கு கடை பெயர் தெரியாது. வாதியும், அவரது தந்தையும் அடிக்கடி கோயமுத்தூர் கலெக்டர் அலுவலகத்திற்கு எதிரே உள்ள கே.ஆர் பேக்கரியில் சந்தித்து கொள்வது வழக்கம் என்று சொன்னால், சரியல்ல. காரணம் அவரது வேலை நிமித்தமாக அவரால் செல்ல இயலாது. நான் கூறுவது தவறு என்றும், விடுமுறை நாட்களிலும், வேலை முடிந்த பின்னரும் அவ்வாறு சந்தித்துக் கொள்வது வழக்கம் என்று சொன்னால் சரியல்ல. தனபாலும், நானும் கோவை சித்தபுதூரில் ஒரு வாடகை வீட்டில் குடியிருந்தோம் என்று சொன்னால் சரிதான். அந்த சமயத்தில் சித்தாபுதூரில் உள்ள டெம்ட் என்ற கடையில் தனபால் வாதியை சந்திப்பது வழக்கம் என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கும்,அவரது தந்தை தனபாலுக்கும் எப்பொழுதும் சுமூகமான உறவு இருந்தது என்று சொன்னால், ரூபாய் கொடுப்பதற்கு மட்டும் தனபால் வாதியை ஆர்.எஸ்.புரம், கவுண்டம்பாளையத்தில் உள்ள ஒரு பாலத்திற்கு அருகில் வரச் சொல்வார். தனபாலும், வாதியும் பணத்திற்காக மட்டும் அல்லாமல் நல்ல அன்புடன் இருவரும் நேசமாகத்தான் இருந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. இருவரும் தினமும் அலைபேசியில் பேசிக் கொண்டு செய்திகளை பரிமாறிக் கொள்வது வழக்கம் என்று சொன்னால் சரியல்ல. தனபால் வாதி வசிக்கும் வடவள்ளி வீட்டிற்கு அடிக்கடி வந்து செல்வது வழக்கம் என்று சொன்னால் சரியல்ல. அப்பொழுது எல்லாம் வாதியின் தாயாரையும் தனபால் சந்திப்பது வழக்கம் என்று சொன்னால் சரியல்ல. வாதியிடம் தனபால் என்னுடன் நடந்ததாகச் சொல்லப்படும் திருமணத்தைப் பற்றி எதுவும் கூறியதில்லை என்று சொன்னால் ஜீவனாம்ச மனுவில் தாக்கல் செய்த பதில் மனுவிலேயே தனபால் அதைப் பற்றி கூறியுள்ளார். ஆனால் அதற்குரிய ஆவணம் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யவில்லை என்று சொன்னால், சரிதான், ஆனால் என்னிடம் வீட்டில் உள்ளது. நான் பனிரெண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ், ஆங்கிலம் எழுதப் படிக்கத் தெரியும். நான் பதிவுத்துறையில் வேலை செய்து வந்தேன். 2003 ல் இளநிலை உதவியாளராக பணியில் இருந்தேன். நான் திருப்பூர், பொள்ளாச்சி, கோயமுத்தூர் ஜாயிண்ட் 1, காந்திபுரம், துணைப் பதிவுத்துறை அலுவலகம், மதுக்கரை, கோயமுத்தூர் ஜாயிண்ட் 1 ஆகிய இடங்களில் வேலை செய்துள்ளேன். 2020 ல் உதவியாளராக இருந்த சமயத்தில் நான் ஓய்வு பெற்று விட்டேன். பதிவு அலுவலகங்களில் என்ன, என்ன பணிகள் நடைபெறும் என்ற விவரம் எனக்குத் தெரியும். பத்திர பதிவு விவரங்கள் எனக்குத் தெரியும். 15-04-2021 ல் தனபால் நல்ல மனநிலையிலும், ஆரோக்கியத்துடனும் உயில் எழுதி வைத்ததாகச் சொல்லப்படுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. அவருக்கு 15 முதல் 20 வருடங்கள் சர்க்கரை வியாதி இருந்தது என்று சொன்னால் 2005 லிருந்து அவருக்கு சர்க்கரை வியாதி இருந்தது. 12-07-2018 அன்று கோயமுத்தூரில் உள்ள ஜி.கே.என்.எம் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார் என்று சொன்னால் சரிதான். அப்பொழுது அவருக்கு வலது காலில் வீக்கம் ஏற்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். சுமார் ஒருவார காலம் உள்நோயாளியாக இருந்து அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். 18-10-2018 அன்று முட்டிக்கு கீழே ரத்த ஓட்டம் இல்லை என்று பரிசோதிக்கப்பட்டு 25-10-2018 அன்று மீண்டும் அதே மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார் என்று சொன்னால், 18-10-2018 அன்று மகா புஸ்கர்ணிக்காக திருநெல்வேலி நவதிருப்பதி சென்று இருந்தோம். அதன் பின்னர் 25-10-2018 ல் திருநெல்வேலியிலிருந்து ஆம்புலென்ஸ் மூலமாக கோயமுத்தூருக்கு கொண்டு வந்தோம். 29-10-2018 ல்

இடதுகாலில் உள்ள ஐந்து விரல்களும் அவருக்கு அகற்றப்பட்டது என்று சொன்னால் சரிதான். பின்னர் 20-11-2018, 30-11-2018 ஆகிய தேதிகளில் மேற்கொண்டு அறுவை சிகிச்சை அளிக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். 10-12-2018 அன்று அவர் மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார் என்று சொன்னால் சரிதான். தனபால் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த சமயம் வாதி அடிக்கடி மருத்துவமனைக்கு வந்து சென்றார் என்று சொன்னால் சரியல்ல. அலைபேசியிலும் அவரை அழைத்து அவரை நலம் விசாரித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சிகிச்சைக்கு பின்னர் அவரால் சரிவர நடக்க முடியாமல் இருந்தார் என்று சொன்னால், சுமார் ஒரு வருட காலம் அவ்வாறு இருந்தார். அவர் இறக்கும் காலம்வரை சர்க்கரை வியாதிக்காக மருந்து எடுத்து வந்தார் என்றால் சரிதான்.

உயில் எழுதியதாகக் கூறப்படும் 15-04-2021 அன்று யார், யார் தனபாலுடன் சென்றார்கள் என்றால், அன்றைக்கு அவர் வெளியில் செல்லவில்லை. ஒரு நோட்டரி வக்கீலும், சாட்சிக்காக இரண்டு பேரும், தனபாலின் தங்கை வந்தார்கள். மேலும் என்னுடைய சகோதரியும், அவரது மகளும் அங்கு இருந்தார்கள். அதற்கு முந்திய நாளே அதாவது 14-04-2021 அன்றே தனபால் உயில் ஆவணத்தை தயார் செய்து வைத்திருந்தார். நான் கூறியதுபோல் எதுவும் நடக்கவில்லை என்றும், வழக்கிற்காக அவ்வாறு கூறுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. அந்த சமயத்தில் நான் சித்தாபுதூரில் குடியிருந்தேன். 381, சிவசக்தி லேஅவுட், நியு சித்தாபுதூர் என்ற முகவரியில் குடியிருந்தேன். உயில் எழுதப்பட்டதாக கூறப்படும் காலக் கட்டத்தில் பரவலாக Covid இருந்தது என்று சொன்னால் சரிதான். அந்த சமயத்தில் மத்திய, மாநில

அரசுகள் நிறைய கட்டுப்பாடுகளை விதித்திருந்தார்கள் என்று சொன்னால் அந்த சமயத்தில் சற்று தளர்த்தியிருந்தார்கள். சித்தாப்புதூரிலிருந்து ஆலாந்துறை எவ்வளவு தொலைவு என்று எனக்குத் தெரியாது. சித்தாப்புதூரிலிருந்து ஆலாந்துறை சுமார் 28 முதல் 30 கி.மீ தொலைவு இருக்கலாம் என்று சொன்னால், எனக்கு அதைப் பற்றித் தெரியாது. 15-04-2021 தேதியிட்ட உயிலானது தனபாலின் கையொப்பத்தை போலியாக இட்டு ஆள் மாறாட்டம் செய்து வாதியை ஏமாற்றி சொத்தினை அகபரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் நானும், என்னைச் சேர்ந்தவர்களை சாட்சிகளாகவும் போட்டு போலியாக தயார் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. உயிலில் கண்டுள்ள சங்கதிகள் யாரும் வாதியை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. உயில் செல்லாதது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1ல் ஒவ்வொரு பக்கத்திலும் தனபால் முதலாவதாக கையொப்பம் செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.2 லும் தனபாலின் கையொப்பம் ஒவ்வொரு பக்கத்திலும் மற்றும் எழுதி வாங்கியதாக ஒப்புக் கொண்டவர் என்ற இடத்திலும் காணப்படுகிறது என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ன் அடிப்படையில் தனபாலின் பெரியம்மா பிரிபடாத அவருக்குரிய 1/2 பாகத்தைதான் தனபாலுக்கு எழுதியுள்ளார் என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஐ எழுதிய அங்காத்தாள் தற்போது இருக்கிறாரா, காலமாகி விட்டாரா என்றால், காலமாகி விட்டார். ஆனால் இறப்புச் சான்றிதழ் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை. தனபால் 18-05-2021ல் காலமாகி விட்டார். ரேஸ்கோர்சில் உள்ள ஸ்டேட்பேங்க் ஆப் இந்தியா கிளையில் தனபால் வைத்திருந்த வங்கி கணக்கானது அவரது தனிப்பட்ட பெயரில் இருந்தது என்று சொன்னால் சரிதான். தனபால் இறந்த பின்பு அந்த கணக்கில் இருந்த ரூ.16,95,695/-ஐ 04-06-2021 தேதி ரூ.1000/- மற்றும்

ரூ.9,99,000/- மொத்தமாக ரூ.10 லட்சமும், 05-06-2021 தேதி ரூ.6,87,000/-மும் மொத்தமாக ரூ.16,87,000/- எனது வங்கிக் கணக்கிற்கு மாற்றப்பட்டது என்று சொன்னால் சரிதான். அவ்வாறு நான் மாற்றியது சட்டப்படி தவறு என்று சொன்னால் தனபால் மருத்துவமனையில் இருக்கும்பொழுது செலவிற்காக கைமாற்றாக வெளி நபர்களிடம் வாங்கிய கடன்களை அடைப்பதற்காக அந்த பணத்தை எனது வங்கிக் கணக்கிற்கு மாற்றினேன். யார், யார் அந்த வெளி நபர்கள் என்ற விவரத்தை நான் மனுவில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். கைமாற்றாக கடன் வாங்கியதாக வழக்கிற்காக தவறாக குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கும்அந்த தொகையில் உரிமை உள்ளது என்பதால் அவசரமாக அந்த தொகையை வாதிக்கு கொடுக்கக் கூடாது என்று எனது வங்கிக் கணக்கிற்கு நான் மாற்றிக் கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. எனது வங்கிசேமிப்பு கணக்கு புத்தகத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலும். அவ்வாறு நான் தாக்கல் செய்தால் உண்மையான விவரங்கள் வெளிவரும் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த அசல் மனுவிற்கும், அசல் வழக்கில் நான் தாக்கல் செய்த எதிருரைக்கும் தற்போது தாக்கல்ள செய்திருக்கும் எனது முதல் சாட்சியத்திற்கும் நான் தகவல் கொடுத்ததன் அடிப்படையில்தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார் என்று சொன்னால் சரிதான். அதில் சொல்லப்பட்டுள்ள விவரங்களை படித்துப் பார்த்த பின்புதான் நான் கையொப்பம் செய்தேன். மேலே குறிப்பிட்டுள்ள மூன்று ஆவணங்களிலும் முன்னுக்கு பின் முரணான காரணங்கள் காணப்படுகிறது என்று சொன்னால் சரியல்ல. தனாபல் நன்கு படித்தவர் என்றும், அவருக்கு உலக விவரங்கள் தெரியும் என்றும் சொன்னால் சரிதான். அவருக்கு அவர் வேலை செய்த வருவாய் துறையிலும், வெளியிலும் நிறைய நண்பர்கள் இருக்கார்கள்

என்று சொன்னால் சரிதான். அவருக்கு நிறைய உறவினர்கள் இருக்கிறார்கள் என்றும், அவர்களுடன் தனபால் நல்ல உறவில்தான் இருந்தார் என்று சொன்னால் சரிதான். பொது காரியங்களில் தனபால் ஈடுபடக் கூடியவர் என்று சொன்னால் சரிதான். தனபாலுக்கு வாதியின்மேல் அன்பும், பாசமும் எப்பொழுதும் இருந்தது என்று சொன்னால் ஓரளவிற்கு இருந்தது. தனபாலுக்கு வாதியின் மீது அளவு கடந்த பாசமும், பிரியமும் இருந்தது என்றும், நான் வழக்கிற்காக ஓரளவு என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சித்தாப்புதூரிலிருந்து மாவட்ட பதிவாளர் அலுவலகம், ஜாயிண்ட் 1, ஜாயிண்ட் 2, கணபதி, காந்திபுரம், பீளமேடு சார்பதிவாளர் அலுவலகங்கள் சுமார் 2 கி.மீ தொலைவில்தான் அமைந்துள்ளன என்று சொன்னால் சரிதான். சித்தாபுதூரிலிருந்து கோயமுத்தூர் நீதிமன்றமும் இரண்டு கி.மீ தொலைவில்தான் உள்ளது என்று சொன்னால் சரிதான். கோயமுத்தூர் நீதிமன்றத்தைச் சுற்றி நிறைய நோட்டரி வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால், எனக்கு அதைப் பற்றி தெரியாது. எனக்கு குழந்தைகள் எதுவும் இல்லை. தனபாலுக்கு வாதி மட்டும்தான் ஒரே குழந்தை என்று சொன்னால் சரிதான். தாவாவில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்களைத் தவிர வேறு சொத்துக்கள் தனபாலுக்கு கிடையாது. 15-04-2021 தேதியிட்ட உயிலை நான் படித்துப்பார்த்துள்ளேன். அதில் அனைத்து சொத்துக்களும் எனக்கு கொடுக்கப்பட்டதாக எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். என்னைத் தவிர வேறு யாருக்கும் கொடுக்கப்படவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. உயிலில் வாதியின் படிப்பு விவரங்கள் தவறாக சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால், எனக்கு அதைப் பற்றித் தெரியாது. வாதியின் பெயர் விக்னேஷ்தான், அவர் டிப்ளமோ & இன்சிஜியரிங் மட்டும்தான் படித்துள்ளார் என்று

சொன்னால் அதைப் பற்றி எனக்குத் தெரியாது. தனபாலுக்கு அந்த விவரங்கள் தெரியும். தனபாலுக்கு உடல்நிலை சரியில்லை என்று 17-05-2021 அன்றுதான் தெரியப்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 18-05-2021 அன்று விடியற் காலை 1 மணி அளவில் இறந்து விட்டார். சுமார் 5 மணி அளவில் மருத்துவமனையிலிருந்து அவர்களாகவே தனபாலின் சகோதரியான பரிமள சுந்தரியின் கணவருக்கு தகவல் தெரிவித்தார்கள். பரிமளசுந்தரி 17-05-2021 அன்று தனபாலிற்கு உடல்நிலை சரியில்லை என்று தெரிவித்தார் என்றும், பின்னர் மறுநாள் இறந்த விவரத்தையும் அவர் தெரிவித்தார் என்று சொன்னால், அதைப் பற்றி எனக்குத் தெரியாது. எனக்கு அந்த விவரங்கள் அனைத்தும் நேரடியாகத் தெரியும் என்றும், வழக்கிற்காக தெரியாது என்று தவறாக குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. தனபால் அவர்கள் Covid ஆல் தான் இறந்தார் என்று சொன்னால் சரிதான். Covid ஆல் அவர் எவ்வளவு நாள் பாதிக்கப்பட்டிருந்தார் என்றால் இரண்டு நாள் பாதிக்கப்பட்டிருந்தார். அது சம்மந்தமான மருத்துவ அறிக்கையை என்னால் சமர்ப்பிக்க முடியும். வாதிதான் தனபாலுக்கு இறுதி காரியங்களை செய்தார் என்றால் சரிதான். Covid காரணமாக பெரிதாக எதுவும் செய்யவில்லை. இறுதி சடங்கிற்கு வாதியும், ருக்மணியும் வந்திருந்தார்கள் என்றால் சரிதான். வாதியிடம் நான் தனபாலின் சொத்துக்களை சரிபாதியாக ஒருவருடம் கழித்து பிரித்துக் கொள்ளலாம் என்று நான் கூறினேன் என்றால் சரியல்ல. வாதியுடன் 16 நாள் காரியம் மற்றும் மே 2022 வரை நான் சுமூகமான உறவில்தான் இருந்தேன் என்று சொன்னால், தனபால் இறந்த அன்றுதான் நான் வாதியையே பார்த்தேன். தாவா 3 அயிட்ட சொத்தை மட்டும் நான் கேட்டேன் என்றும், மற்ற சொத்துக்களை வாதியே எடுத்துக் கொள்ளலாம் என்று நான் வாதியிடம் கூறியிருந்தேன் என்று சொன்னால்

சரியல்ல. வாதியிடம் ஆதார் அடையாள அட்டையை வாங்கி அவரது கையொப்பத்தையும் பெற்று வாரிசு சான்றிதழுக்கு நான் விண்ணப்பம் செய்தேன் என்று சொன்னால், ஆதார் கார்டு வாங்கினேன், கையொப்பம் பெறவில்லை. வாரிசு சான்று வாங்கும்வரை அமைதியாகஇருந்துவிட்டு பின்னர் வாதிக்கு எதிராக நான் நடந்து கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. 30 வது நாள் காரியத்தை வாதிக்கு தெரியாமல் நான் நடத்தி விட்டேன் என்று சொன்னால் சரிதான். உயில் பற்றிய விவரத்தை நான் வாதியிடம் தெரிவித்ததாக வழக்கிற்காக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் Probate OP தாக்கல் செய்த அதிலிருந்து இந்த வாதிக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு நீதிமன்றத்திற்கு வந்து மனு நகலை வாங்கிய பின்னர்தான் போலியாக தயாரிக்கப்பட்ட உயில் பற்றிய விவரம் வாதிக்கு தெரியவந்தது என்று சொன்னால் சரியல்ல. தனபாலின் சொத்துக்கள் பற்றிய விவரங்களை வாதி என்னிடம் கேட்க, தருகிறேன் என்று நான் காலம்தாழ்த்தி வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. தாவாச் சொத்துக்களை பாகம் கேட்டு வாதி 21-12-2021 ல் வழக்கறிஞர் அறிவிப்பு எனக்கு அனுப்பியிருந்தார் என்று சொன்னால் சரிதான். அதற்கு நான் பதில் எதுவும் அனுப்பவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்புக்கு பின்னர் நான் எனக்கு தெரிந்த ஆனைமலை பட்டீஸ்வரன் என்பவரை வைத்து வாதியிடம் சமரசம் பேசினேன் என்று சொன்னால், சரிதான், ஆனால் பட்டீஸ்வரனை அழைத்து வந்தது வாதிதான் காரணம் அவர் என்னுடைய கணவரது நண்பர் ஆவார். பட்டீஸ்வரனையும் எனக்கு நன்கு தெரியும். மே 2022 ல் சொத்தை பிரித்து தருமாறு பலமுறை வாதி என்னை அணுகினார் என்று சொன்னால் சரியல்ல. ஆனால் நான் மூன்றாம் நபர்களுடன் சேர்ந்து கொண்டு சொத்துக்களை வில்லங்கப்படுத்த இருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான் பாகம்

கேட்டு இந்த வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு தாவாச் சொத்தில் 1/2 பாகம் உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. போலியான தகவல்களுடன் வாதியின் உரிமையை மறுக்கும் விதமாக ஆள்மாராட்டம் செய்து தயாரிக்கப்பட்ட உயிலானது சட்டப்படி செல்லாது என்று சொன்னால் சரியல்ல. அதனால் நான் தாக்கல் செய்த Probate OP தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வாதி தாக்கல் செய்த வழக்கில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

ஒம்/சரஸ்வதி,

Taken down by me/ typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya,
Principal District Judge,
Coimbatore.